1983 பிப்ரவரி 7]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) அண்ட் (ஆ) கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் ஆண்டொன்றுக்கு 40,000 வீடுகள் கட்ட ரூ. 12.80கோடி தேவைப்படுகிறது. இத்திட்டத்திற்காக 1982—83-ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் அரசு கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்.)

1. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்திற்கு—

(அ) கடன்	150.00
(ஆ) பங்கு மூலதனம்	200.00
(இ) முதலீட்டு மானியம்	450.00

ஆயுள் காப்பீட்டுக் கழகம் மற்றும் பொதுக் காப்புறுதி கழகங்களிடமிருந்து அரசு ரூ. 350 இலட்சத்தை 1982—83-ஆம் ஆண்டு கடனாக எதிர்பார்க்கிறது. 1982-83 ஆம் ஆண்டில் 30—9—1982 தேதிவரை அரசு கீழ்க்கண்ட வண்ணம் நிதியினை வழங்கியுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்.)

1. கடன்	123.72
2. பங்கு மூலதனம்	200.00
3. முதலீட்டு மானியம்	293.26

அரசு தனது நிதியிலிருந்து தேவைக்கேற்ப பணத்தை ஒதுக்கீடு செய்வதால் காலதாமதம் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை.

(முற்பகல் 9-40)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது பல கோடிக்கணக்கான ரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். அப்படி கொடுத்திருந்தாலும் கூட கிராமப்புறங்களில் ஆயிரக்கணக்கான வீடுகள் இரண்டாவது இன்ஸ்டால்மெண்ட் வரவில்லை. மூன்றாவது இன்ஸ்டால்மெண்ட் வரவில்லை என்று நான்கு, ஐந்து ஆண்டுகளாக அப்படியே இருப்பதாக மிகவும் குறைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் இவைகளை மாற்றக்கூடிய அளவிற்கு, அரைகுறையாக கட்டியிருக்கிற வீடுகளை அவர்கள் கட்டிமுடிப்பதற்கு அரசாங்கம் பணம் கொடுப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்,

ஏக்கர் நீர்ப்பாசனம் உள்ள, நீர்ப்பாசனம் இல்லாத நிலம் இருக்க வேண்டும். குறுகிய காலக் கடன் வசதிகள் குறைந்த பட்சம் 2 லட்சம் இருக்கவேண்டும். இல்லையெனில் அந்த சங்கம் நான் வயபிள் சங்கமாகக் கருதப்பட்டு ரிசர்வ் வங்கி உத்திர விட்டு அந்த உத்திரவு நடைமுறைப்படுத்தப்பட்டு கட்டாயமாக ஆக்கப்பட்டு இருக்கிறது. காரணம், கூட்டுறவுச் சங்கங்களுக்கு குறுகிய காலக் கடன்களுக்கு நிதி வசதியை ரிசர்வ் வங்கி தரு கின்றது, ஆகவே அவர்கள் சில கட்டளையிடுகிறார்கள். அதை நடைமுறைப்படுத்தவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஒவ்வொரு ரெவின்யூ வில்லேஜுக்கும் ஒரு கூட்டுறவு சங்கம் இருக்கவேண்டு மென்ற முடிவை மறுபரிசீலனை செய்து அந்த சங்கங்களை வய பிள் என்ற அடிப்படையில் கொண்டுவரவேண்டுமென்று மாநில அரசும் ரிசர்வ்வங்கியிடம் வற்புறுத்தியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வ. சத்தியமூர்த்தி : இந்த கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படுகிறபோது ரிசர்வ் வங்கியின் இந்த விதிமுறைகள் நடைமுறையில் இருந்ததா? இப்போது அவை அனுசரிக்கப்பட் டதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, தமிழகத்திலே மட்டுமல்லாமல், பாரதத்தின் பல்வேறு மாநிலங் களிலே இந்தச் சங்கங்கள் பரவலாக அமைக்கப்பட்டு நான்-வயபிள் என்ற நிலைக்கு வந்து, குறுகிய காலக் கடன்களைத் திருப்பித் தராத நிலைக்கு வந்து ரிசர்வ் வங்கி அதனை ஆராய ஒரு குழுவை அமைத்து ஆராய்ந்தது அந்த ஆய்வின் அடிப்படை யில் அவையெல்லாம். Amalgamation of Co-operativ Societies to a viable xt nt is mevitabl: என்ற முடிவுக்கு வந்திருக்கிறது. மாநிலங்களுக்கு எல்லாம் அறிவுரை கூறி கட்டளையும் இட்டது.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கிராமப்புற வீட்டு வசதி திட்டத்திற்காக ஒதுக்கப்படும் தொகை.

* **வினா எண். 166—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்பு மிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமிய கூட்டுறவு வீடு கட்டும் திட்டத்திற்கு L.I.C. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து அரசு கடன் வாங்கி கொடுப்பதால் காலதாமதமாகின்றது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அரசே தனது நிதியிலிருந்து பணம் ஒதுக் கும் செயற்குறிப்பு உண்டா?